பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
27 10 2024 7 15
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. இந்தியா – பங்களாதேஷ் எல்லையில் கட்டப்பட்டுள்ள பயணிகள் முனையத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று திறந்து வைக்கிறார்.

3. மத்தியில் கடந்த 11 ஆண்டுகளில் நிலையான அரசு நீடிப்பதால் சர்வதேச அளவில் இந்தியாவின் மீதான நம்பிக்கை அதிகரித்துள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

4. ஸ்பெயின் அதிபர் திரு பெட்ரோ **sanchez** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

5. தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் அரை இறுதிப் போட்டியில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் மின் வினியோகத்தின்போது மின் இழப்பை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடிக்குமாறு மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் கட்டார் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் நேற்று மத்திய மாநில அரசுகளின் சார்பில் நடைபெற்று வரும் மின்திட்டங்கள் குறித்து மாநில மின்சாரத்துறை அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி மற்றும் உயரதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

வடசென்னை 800 மெகாவாட் மின்திட்டத்தின் 3வது நிலை 660 மெகாவாட் உடன்குடி அனல் மின் திட்டம், 660 மெகாவாட் எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல திட்டம், 600 மெகாவாட் எண்ணூர் விரிவாகக் மின்திட்டம் ஆகிய அனல்மின் திட்டங்களின் கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்துமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மேம்படுத்தப்பட்ட மின்வினியோக திட்டத்தின்கீழ் மின் இழப்பை குறைப்பதற்காக 8 ஆயிரத்து 932 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய மாநில அரசு அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

**<<<<>>>>**

இந்தியா – பங்களாதேஷ் எல்லையில் கட்டப்பட்டுள்ள பயணிகள் முனையத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று திறந்து வைக்கிறார்.

மேற்குவங்க மாநிலம் **Petrapole** என்ற இடத்தில் இந்த முனையம் அமைக்கப்பட்டுள்ளது.

தரைவழியாக பங்களாதேஷ் செல்லும் வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இந்த முனையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியா – பங்களாதேஷ் எல்லையில் **Petrapole - Benapola** எல்லைப் பகுதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும்.

இந்த வழியாக இந்தியா – பங்களாதேஷ் இடையே 70 சதவீத வர்த்தகம் நடைபெறுகிறது.

ஆண்டுதோறும் 20 லட்சத்துக்கும் அதிகமான பயணிகள் இந்த எல்லைச்சாவடி வழியாக சென்று வருகிறார்கள்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள பயணிகள் முனையம் நாள் ஒன்றுக்கு 20 ஆயிரம் பயணிகளைக் கையாளும் வசதி கொண்டதாகும்.

முன்னதாக மேற்குவங்க மாநிலம் ஹூக்ளி மற்றும் ஆரம்பாக் மாவட்டங்களில் நடைபெறும் கூட்டுறவுத்துறை நிகழ்ச்சிகளில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பங்கேற்க உள்ளார்.

<<<<>>>>

ஆப்பிரிக்க நாடுகளுக்கு கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சுகாதாரத்துறையில் உதவுவதற்கு இந்தியா கடமைப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், நேற்று சர்வதேச செலாவணி நிதியத்தின் துணை நிர்வாக இயக்குநர் திருமதி கீதா கோபிநாத்தை சந்தித்துப் பேசினார்.

பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், ஆப்பிரிக்க நாடுகளுக்கு பல்வேறு வகைகளில் இந்தியா உதவி செய்வதைப் போன்று ஜி-7 மற்றும் ஜி-20 அமைப்பில் உள்ள நாடுகளும் உதவ முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஒரு நாட்டின் நீண்டகால வளர்ச்சிக்கு தேவையான நிதியுதவியை சர்வதேச அமைப்புகள் வழங்க வேண்டும் என்றும், கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைகளில் மாற்றங்கள், உள்நாட்டில் உள்ள வளங்களைத் திரட்டுவதற்கு உதவியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் சீர்திருத்த நடவடிக்கைகளால் வெளிநாட்டு முதலீடுகளை இந்தியா அதிக அளவில் ஈர்த்து வருவதாகவும், ஐ.நா. வகுத்துள்ள நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை எட்ட இந்த முதலீடுகள் அவசியம் என்றும் அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<>>>>

மத்தியில் கடந்த 11 ஆண்டுகளில் நிலையான அரசு நீடிப்பதால் சர்வதேச அளவில் இந்தியாவின் மீதான நம்பிக்கை அதிகரித்துள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புனேயில் நேற்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் பேசிய அவர், சாலைகள், ரயில்கள், பெருநகரங்களின் உள்கட்டமைப்பு திட்டங்கள் மேம்பட்டுள்ளதாகவும், வெளிநாட்டு முதலீட்டை அவை ஈர்த்துள்ளதாகவும் இது மத்திய அரசின் சாதனை என்றும் கூறினார்.

நிலவின் தென் பகுதியில் சந்திரயான் விண்கலத்தை இந்தியா தரையிறக்கியதும், பெருந்தொற்றுக்கு எதிரான தடுப்பூசியைக் கண்டுபிடித்து அதிக அளவில் உற்பத்தி செய்ததும் மற்ற சாதனைகள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரிக்ஸ் மற்றும் குவாட் போன்ற சர்வதேச ஒத்துழைப்பு அமைப்புகளில் இந்தியா ஆற்றிவரும் பங்களிப்பு, சர்வதேச அளவில் நமது நாட்டின் மீதான நம்பிக்கையை அதிகரித்துள்ளது என்றும் அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறினார்.

<<<<>>>>

2035ஆம் ஆண்டு விண்ணில் இந்தியாவுக்கு சொந்தமான விண்வெளி நிலையம் அமைக்கப்படும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இந்த விண்வெளி நிலையம் பாரதீய விண்வெளி நிலையம் என்று அழைக்கப்படும் என்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் அவர் கூறினார்.

இந்திய விண்வெளித் துறையின் விரைவான வளர்ச்சிக்கு பொதுத்துறை – தனியார் பங்களிப்பு முக்கியமானதாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

விண்வெளித் துறையில் தனியார் முதலீடுகளுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதால் அத்தறை புதிய எழுச்சியை பெற்றுள்ளதாகவும், பல தனியார் நிறுவனங்கள் விண்வெளித் துறையில் நுழைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விண்வெளித் துறையில் மட்டும் ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் எண்ணிக்கை 300ஆக அதிகரித்துள்ளது என்றும், இது விண்வெளித்துறை வர்த்தக ரீதியாக பெரிய அளவில் வளர்ச்சி பெறுவதற்கு பங்களிப்பதாகவும் அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

ஸ்பெயின் அதிபர் திரு பெட்ரோ **sanchez** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

பிரதமர் திரு நரேந்திரமோடியை அவர் சந்தித்து இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இந்தியாவில் உற்பத்தி செய்வோம் திட்டத்தின் கீழ் ஸ்பெயின் நிறுவனத்துடன் இணைந்து வதோதராவில் ஏற்படுத்தப்பட்டுள்ள விமான கட்டுமான தொழிற்சாலையை இரு தலைவர்களும் இணைந்து தொடங்கி வைக்கவுள்ளனர்.

ஸ்பெயின் அதிபர் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கரையும் சந்தித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இதையடுத்து மும்பையில் வர்த்தகம், தொழில்துறை தலைவர்கள் மற்றும் திரைப்படத் துறையைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் ஸ்பெயின் அதிபர் கலந்துரையாடவுள்ளார்.

ஸ்பெயின் அதிபரின் இந்த பயணத்தின்போது பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

18 ஆண்டுகளுக்கு பிறகு ஸ்பெயின் அதிபர் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்வது இதுவே முதல்முறை என்று வெளியுறவுத்துறை செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

ஈரானை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலுக்கு மத்திய கிழக்கு நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கை மேற்காசியாவின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்று ஜோர்டான் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஈரான் மீதான இஸ்ரேல் தாக்கதல் பதற்றத்தை அதிகரித்துள்ளதாகவும், அனைத்து நாடுகளும் சர்வதேச சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் என்றும் குவைத் கேட்டுக்கொண்டுள்ளது.

ஈரானின் இறையாண்மையை மீறி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளதாக சிரியா கூறியுள்ளது.

<<<<>>>>

காத்மாண்டுவில் நடைபெற உள்ள தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் அரை இறுதிப் போட்டியில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டியில் 5 முறை பட்டம் வென்றுள்ள இந்தியா, அரை இறுதியில் நேபாளத்தை வெல்லும் முனைப்பில் உள்ளது.

<<<<>>>>

இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

அகமதாபாதில் பகலிரவு போட்டியாக நடைபெற உள்ள இந்த ஆட்டம் பிற்பகல் 1.30 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

அல்பேனியாவில் நடைபெறும் 23 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியின் 61 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் அபிஷேக், யுக்ரைன் வீரரை வீழ்த்தி வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றினார்.

மற்றொரு இந்திய வீரர் சிராக், 57 கிலோ எடைப்பிரிவில் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற அரை இறுதியில் அவர் கஜகஸ்தானின் **Allan Oralbek**-ஐ தோற்கடித்தார்.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் அவர், கிர்கிஸ்தானின் **Abdy Malik Karachov**-ஐ எதிர்கொள்கிறார்.

70 கிலோ எடைப்பிரிவில் சுர்ஜித், 97 எடைப்பிரிவில் விக்கி ஆகியோர் வெண்கலப் பதக்கத்திற்கான போட்டியில் இன்று பங்கேற்கிறார்கள்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத் அணி 4-0 என்ற கோல் கணக்கில் முகமதன் அணியை வென்றது.

மற்றொரு போட்டியில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி 5-0 என்ற கோல் கணக்கில் ஜம்ஷெட்பூர் அணியை வென்றது.

இன்று 7.30 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் மும்பை அணி - ஒடிசா அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The end>>>>**